உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

“ பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்: அமிர்தென, எழுநா எச்சில்
மெச்சிநா ணுளும் விண்ணோர் மிசைகுவர்: வேத போதன்
‘நச்சினார்க் கினியன்’ எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்’

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”—தமிழ் மறை

தொகுதி 3. } அக்ஷய ௵ பங்குனி ௴ 1927 ௵ மார்ச்சு ௴ { பகுதி 3.

எங்கள் நாடு.

வங்கங் கலிங்க மகதங் குலிங்க மச்சங் தெலுங்கு துளுவம்
துங்கம் மிகுந்த நற்பாண்டி சேர சோணாடு காத்த வீரர்
பொங்கும் சிறந்த புகழோடு மூற்ற புண்தாங்கு சேய மார்பர்
எங்கும் நிறைந்து மிணையே யிலாத இசை பெற்ற தெங்கள் நாடே. (9)

ஊணவும் சிறந்த உடையொடு செல்வ உயர்வும் பரந்த விடனும்
இணையே இலாத வேளாண்மைசெய்தல்இயல்வாணி பஞ்சொல் சிற்பம்
அணுவும் விரிந்த அலையோடு வெற்பும் அழகான மற்ற உருவும்
அணுகும் படிக்கு வரை சித்ர மாதி அறிவிப்ப தெங்கள் நாடே (10)

மணிநீல முத்து வயிரத்தி னோடு வைடூர்ய புஷ்ப ராகம்
அணிபச்சை கோமே தகமோடு பவள மவை யொன்ப தாகு மணியும்
துணியுந் திறத்தின் வல்லோ ரொருக்கு தோய்ந்திட்ட தெங்கள் நாடே.
பணியும் இயற்று வழியும் அறிந்த பண்புள்ள தெங்கள் நாடே. (11)

கலமீது செல்லும் வழியும் தெரிந்து கரையும் விளக்கும் ஒளியும்
நலமோ டியற்ற முதலா யிருந்த நன்னாடு மெங்கள் நாடே
நிலமீதி லூற்ற வேவையேனு முந்த சேர்ந்திட்ட தெங்கள் நாடே
புலமீ திலங்கு வலமோ டியன்று பொலிவோடு வாழ்க இனிதே. (12)

நா. லெக்ஷ்மி நரசிம்மையர், தமிழ்ப்பண்டிதர், வத்திராயிருப்பு.

மருவி வழங்கும் சில சொற்கள்.

(21-ஆம் பக்கத் தொடர்ச்சி)

செந்நிறம் தோன்றுமாறு காலிலும் கையிலும் ஸ்திரிகளுக்கும் குழந்தைகளுக்கும் அறைத்துப் பூசும் ஒருவகைப் பச்சிலையை 'மருதாணி' என்பர். இச்சொல்லுக்குப் பொருள் இல்லை. இதன் திருத்தமொழி "மருதோன்றி' என்பதே. 'மருதோன்றி' என்பது 'வாசனையைத் தோற்றுவிக்கும் மலரை முதலில் உணர்த்திப் பின்னர், அது தோன்றும் செடி அல்லது மரம், அம்மரத்திலுள்ள இலை இவற்றைக் குறிக்கும் மொழி ஆயிற்று.

ஒரு பொருளை இழந்தோர், அதனை மீண்டும் பெற வேண்டுங் கால், "ஸ்வாமி! இது அகப்பட்டால் இத்தனை தேங்காய் 'சதுர்த் தேங்கா' யாகவே உடைக்கிறேன்" என்று உறுதி கூறக் கேட்டிருக்கிறோம். "சதுர்த் தேங்காய்" என்றால் என்ன? 'சதுர்' என்பது, நாட்டியத்தையோ, நாட்டிய சாலையையோ, குறிக்கும் சொல் ஆதலின், அதற்கும் தேங்காய்க்கும் ஒரு சம்பந்தமும் இருக்க ஞாய மில்லை பாருங்கள். சிறிது ஆராயின், "சதுர்க்காய்"என்பது "சிதறு காய்" என்றிருக்க வேண்டு மெனப் புலப்படும். ஏனெனில், இக்காய்கள் உடைப்பவரால் கொள்ளப்படாமல், பிறர் எவரும் கொள்ள நாலாபக்கமும் சிதற ஓங்கி அடிக்கப்படும் காய்கள் அல்லவா?

"பார்க்காய்" என்றும், "பாவக்காய்" ஒருவகைக் கைப்புக் காயைக் கூறுகிறார்கள். 'பார்க்காய்' என்பதற்குப் பொருளே இல்லை 'பாவக்காய்' என்றால் "பாவம் நிறைந்த காய்" என்று பொருள் படுகிறது. இவ்விரண்டும் பொருத்தமில்லாச் சொற்களாய்விட்டன. திருத்தமான மொழியாதெனில், "பாகற்காய்" என்பதே. இதற்குப் "பாகல்' என்ற கொடியில் முளைக்குங்காய்" என்பது பொருள்,

போக்கற்றுத்திரியும் துஷ்டனொருவனைப் "போக்கிரி" என்கிறார்கள். "போக்கிரி" என்பதற்குப் பொருள் இல்லை. அச்சொல் "போக்கிலி" என்றிருத்தலே நேர். 'போக்கிலி' என்பதற்குப் 'போக்கில்லாதவன்' 'மனம்போனபடி திரிபவன்' என்பன பொருளாதல் காண்க.

(இன்னும் வரும்) பத்திராதிபர்.

பத்திமிகு மாணிக்க வாசகப்பெம் மான்,பரனைப் பரவுங்காலை,
'அந்தன்'என அழையாமல்,'அத்தன் ஒப்பாய்!'என அழைத்த அருமை காணாய்!
[பெம்மான்-பெருமான். பரன்-பரமசிவன். பரவுங்காலை-துதிக்கும் பொழுது. அந்தன்-தந்தை]

இவ்வுலகில், பிறபிரிய உறவினர்தம் பிரிவாற்று தேங்கி நிற்கும்
ஒவ்வொருவ ருக்கும் ஒவ்வோர் உபசாரம் கூறிஅவர் உள்ளத் தார்ந்த
கவ்வைஅகற் றிடலாம்.பொற் றாலி,மஞ்சள், குங்குமம்பூ கவினச் செய்தே,
எவ்வம்அகற் றிடுபதியை இழந்தநின்தாய்க் குபசாரம் இயம்பற் பாற்றோ?
[கவ்வை-துன்பம். அகற்றிடலாம்-நீக்கலாம் கவின-அழகுற. எவ்வம்-தனிமை, நீராத்துன்பம்.]

'எக்காலம் இனிநினைஓர் முறையேனும் கண்ணார யாங்கள் காண்போம்!
எக்காலம் நின்குரலை யாம்கேட்போம்! மின்னுமல் இடித்த தையோ!
இக்காலக் கொடுமை!இது" எனஏங்கித் தவிக்கும்நுமக் கென்போன் றுள்ள
தக்கார்எத் தனைசொலினும் அதனால்நும் துயர்சிறிதும் தணியா தம்மா!

நத்திடுநற் றந்தையிழந் துளநீயும், பதிஇழந்த நன்மா தாவும்,
புத்தியுளீர் ஆதலின்,நீர் உலகியலை நன்கறிந்து, புலம்பு வோரைச்
சித்தம்நலி யாதவகை தேற்றிடுமின். நும்முடைய நீராத் துன்பம்
இத்தரையில் ஆற்றவலார் எவரும்இலர். நாள்,அறிவே இனிநின் ஆற்றும்.
[நத்திடு-வாஞ்சைவைத்த. பதி-கணவன். நலியாத-வருந்தாத. நாள், அறிவு-காலமும், விவேகமும்.]

'தீங்கவிசேர் புலவனுக்குத் தீர்க்கதரி சனம்கூறும் திறன்உண்' டென்னல்,
ஈங்கென்நினை வுக்குவர, உந்தைஎவண் எங்ஙன்என் றெண்ணிப் பார்த்தேன்.
ஓங்குயர்விண் உற்றவன்நின் உதரத்தே பலமகவா உதிக்கு மாறே
இங்ஙனென்என் றறிந்திட்டேன். நின்நற்றாய்க் கிச்செய்தி நிகழ்த்து வாயே.
[தீங்கவி-இனியகவி தீர்க்கதரிசனம்-முக்கால உணர்ச்சி. எவண்-எவ்விடத்தில். மகவு-குழந்தை உதரம்-வயிறு.]

பார்வதிசெல் வியின்பாலும் சாவித்தி ரியின்பாலும் பாரோர் போற்றச்
சீர்வதிநற் றந்தையரின் குலம்செழிக்கப் பன்மக்கள் செனித்த வாறே,
பார்வதிசெல் வீ! நின்பால் நின்தந்தை குலம் செழிக்கப் பலநன் மக்கள்
ஆர்வதுகாண் பாய்.தீர்க்க மங்கிலியத் துடன்நீபல் லாண்டு வாழி!
[சீர்வதி-சிறப்புவாய்ந்த ஆர்வது-நிறைவது]

இங்ஙனம்,
உன்பிரியமுள்ள சிறிய தந்தை
ராஜா. (ம. கோபாலகிருஷ்ணன்.)

காமந்தக நீதி சாரம்.

([illegible]-ஆம் பக்கத் தொடர்ச்சி.

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் இவைகளுள் ஒவ்வொன்றும், அழிவைத் தருமென்பதில் ஐயமில்லை.

மான் சுத்தமான பசும்பற்களையே புசிக்கின்றது. அன்றியும் அது வெகுதூரம் ஓடுவதில் வல்லமையுள்ளது. ஆயினும் அது இசையிற் கொண்ட விருப்பத்தால் வேடர்வசப்பட்டு நாசமடைகின்றது.

யானை மலைச்சிகரம்போல் பெரிதாயிருக்கின்றது. விளையாட்டாக மரங்களைப் பிடுங்கி பெறியும் வலிமை வாய்ந்தது. ஆயினும், அது பெண் யானையின் ஸ்பர்சத்தில் கொண்ட மோகத்தால் இருப்பு முளையில் கட்டப்படுகின்றது.

விளக்குப்பூச்சி அழகான தீப ஜ்வாலையின் காந்தியில் கொண்ட மோகத்தால் அப்பொழுதே அதில் விழுந்து அழிகின்றது.

மீனானது கண்ணுக்கெட்டாத தூரத்தில் சஞ்சரிக்கின்றது, ஆழ முள்ளவிடத்தில் அலைகின்றது. ஆயினும் அது வலையிலுள்ள மாமிசத்தை நாவால் நக்கி நாசமடைகின்றது.

வாசனையில் பற்றுள்ள வண்டானது மதநீராகிற மதுவைப் பருகவேண்டுமென்ற விருப்பத்தால், சுகமாய் வசிக்கக்கூடிய யானையின் செவிகளையடைந்து அழிகின்றன.

விஷத்தைப்போன்ற விஷயங்களுள் ஒவ்வொன்றும் மனிதனைக் கெடுக்கின்றது. சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய ஐந்து விஷயங்களுக்கும் ஒரே சமயத்தில் ஆட்படுபவன் எவ்வாறு க்ஷேமத்தைப் பெறுவான்?

இந்திரியங்களை அடக்கிய புருஷன் எப்பொழுதும் பற்றுள்ளவனாயிராமல், அவ்வக் காலங்களில் சுகத்தை அனுபவிக்கவேண்டும். ஏனெனில் சுகானுபவமே செல்வத்திற்குப் பயனாகும். அச்சுகத்தை அனுபவிக்காமல் தள்ளிவிட்டால், செல்வம் வீணேயாகுமன்றோ?

மனைவிகளின் முகங்களைப் பார்ப்பதிலேயே மிகப் பற்றுள்ளவர்களும், அதனால் ஆனந்தத்தை யடைகின்றவர்களுமான அரசர்களுடைய செல்வங்கள் இளமையைப்போல் நழுவிப்போகின்றன.

தர்மத்தினுல் செல்வம் கிடைக்கின்றது. செல்வத்தினுல் காமம் உண்டாகின்றது. காமத்தினுல் விஷய சுகம் உண்டாகின்றது இவ் விஷயத்தையுணர்ந்து தர்மம், அர்த்தம், காமம் இவைகளைப் பெருத வன் அவைகளைக் கெடுத்துத் தன்னையும் கெடுத்துக்கொள்ளுகிருன்.

ஸ்திரீ என்ற பெயரைக் கேட்டாலே மனம் கலங்குகின்றது. அவர்களுடைய சிங்கார சேஷ்டைகளைக் காணின், மனம் கெடு மென்று கூறவும் வேண்டுமோ? ஸந்தியாகாலமானது நிர்மலமாயும் சாந்தியையுண்டாக்குவதாயுமுள்ள சந்திர மண்டலத்தைச் சிவப் பாக்குவதுபோல, ஸ்திரீயானவள், எளிதில் வசப்படுத்தக்கூடாத தும், நிர்மலமானதும் தேஜஸோடுகூடியதுமான முனிவர் மனதை யும் ஆசையுள்ளதாகச் செய்கின்ருள்.

மனதை மகிழச்செய்கின்றவர்களும், மிகவும் கர்வத்தையுண்டு பண்ணுகின்றவர்களுமான ஸ்திரீகள், நீர், மலைகளைக் கரைத்துக் கெடுப்பதுபோல, மஹான்கள் மனத்தையும் கலக்கிக் கெடுக்கின் றனர்.

வேட்டை, சூது, கள் ஆகிய இவைகள் அரசர்களால் தள்ளத் தக்கவைகளாகும்: பாண்டு வேட்டையினுலும், நளன் சூதினுலும், விருஷ்ணி கள்ளுண்டலாலும் ஆபத்தை யடைந்தனர்.

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாத்ஸர்யம் ஆகிய ஆறினையும் அரசன் அகற்றவேண்டும். மன்னவன் இவற்றை விட்டுவிட்டால் சுகத்தை யடைவான். தண்டகன் என்ற அரசன் காமத்தாலும், வாதாபி மோகத்தாலும், இராவணன் மதத்தாலும் தம்போத்பலன் மாத்ஸரியத்தாலும் மரணமடைந்தது பிரசித்த மன்றே? இந்திரியங்களைவென்ற மஹாத்மாவான பரசுராமரும் அம்பரீஷன் என்ற அரசனும் இவ்வாறையும் விட்டதால் வெகு காலம் ஆக்ஞை செலுத்தினர்.

ஆசிரியரை யடைவதால் சாஸ்திர ஞானம் உண்டாகின்றது. சாஸ்திர ஞானத்தால் வினயம் வளர்கின்றது. அத்தகைய வின யத்தைப்பெற்ற பார்த்திபன் பெரிய ஆபத்துக்காலத்திலும் துன் பத்தை யடைவதில்லை.

நல்லோரைத் தழுவியிருக்கும் இறைவன் சாதுக்களால் கொண்டாடப்படுகின்ருன். தீயோர் தூண்டினுலும் அவன்ல்

வழியில் பிரவேசிக்கமாட்டான். தினந்தோறும கலைகளை நன்கு அப்பியாசிக்கும் அரசன் பிறைச்சந்திரன்போல் வளர்கின்றான்.

இந்திரியங்களை வென்றவனும், நீதிநெறியில் நடப்பவனுமாகிய வேந்தனுக்குச் செல்வங்கள் மேன்மேலும் விருத்தியடையும். அன்றியும், அவனுடைய புகழ் ஆகாயமெங்கும் பரவும். தான் அநுஷ்டிக்கும் காரியங்களைச் செய்கின்ற இத்தகைய மன்னவன், மகா மேரு மலையின் சிகரத்தைப்போல, உன்னதமாயும் பிரகாசமாயுமுள்ள செல்வங்களைப்பெற்றுச் சக்ரவர்த்தியாகின்றான்.

இயற்கையிலேயே பெருமை பொருந்திய அரசத் தன்மை யாவரையும் தாண்டிநிற்கின்றது. ஆதலால் அரசன் இந்த அரசத் தன்மையைப் பலத்தாலும் வினயத்தாலும் விருத்திசெய்யவேண்டும். நீதியை மேற்கொண்டால், வினயம் தானாகவே வந்துசேரும்.

வினயமுள்ள வேந்தன் எல்லோராலும் வணங்கப்படுகின்றான். மன்னவர்களுக்கு வினயமே பூஷணமாகும். கொடையாளியும், அற்பமாகக் கப்பம் வாங்குவோனும், தன்காரியத்தைச் செய்கின்றவனுமான அரசன், மதநீரைப் பெருகவிடுகின்றதும், துதிக்கையை அங்குமிங்கும் அலையவிடுகின்றதுமான சிறந்த வேழத்தைப்போல, வினயத்தினால் விளங்குகின்றான்.

குருவானவர் சாஸ்திர ஞானத்தின் பொருட்டுச் சேவிக்கப்படுகின்றார். குருவிடமிருந்து பெறப்பட்ட வித்தை அறிவாளிக்கு ஞானத்தை உண்டாக்குகின்றது. சாஸ்திரங்களைப் பின்பற்றிய அறிவாளிகளின் அபிப்பிராயங்கள் செல்வத்தை வளர்க்கின்றன. ஸாமர்த்தியமுள்ள ஸத்குருவை யடைந்து, பரிசுத்தத்துடன் அவர் கூறியபடி செய்கின்றவனும், வினயமுள்ளவனுமான புருஷன் ஸம்பத்தையும் ராஜ்யத்தையும் பெறுவான்.

அரசன் பலவானாயிருந்தாலும், விஷயங்களில் பற்றுள்ளவனாயிருப்பின், அவனை, அவன் பகைவர்கள் வென்று வசப்படுத்துகின்றனர். பெரியோரின் உபதேசத்தால் வினயமடைந்த அரசன், அற்பப் பலமுள்ளவனாயிருந்தாலும், ஓரிடத்தும் அவமானத்தை யடைவதில்லை.

(முதலாவது ஸர்க்கம் முற்றிற்று.)

பண்டித: எம். எம். நாராயணசாமி ஐயர், முடிகொண்டான்.

சங்கத் தமிழர் சமய நிலை.

(6?-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இச் சில வொழுக்கங்களைத் தவிர்த்து, பிறவற்றுளெல்லாம் தமிழர் தமது பாரம்பரானுஷ்டமாகக் கைவந்த பழக்கங்களையே பின்பற்றி நின்றனர். இவர்க்குள்ளே மணவினைக்கு, ஆடவர்க்குப் பதினறு வருடமும் பெண்களுக்குப் பன்னிரண்டு வயதும், வதுவை யயர்தற்குரிய வயதாகக் கருதப்பட்டன. இதற்குக் காரணம், இதுவே கருவுறற்குரிய காலமாதலாலெனக்கூறுவர். இறையனுரகப் பொருட் குரைகண்ட புலவுத் துறந்த நோன்புடையாராகிய இளம் பூரணவடிகள் சிலப்பதிகாரத்தும், இளங்கோவடிகள் கண்ணகி கோவலன் இருவர் பருவத்தையும் எடுத்தோதுவான் புகுந்தவர்,

“ அவளுந்தான்,
மாகவா னிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னுள் ஈராறுண் டகவையாள்
....
அவனுந்தான்,
வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்துவா னென்பான்
இருநிதிக் கிழவன்மக னீரெட்டாண் டகவையான்.”
(சிலப். 1. 22. 29)

என்று கூறிச் செல்லுகிறர். ஆனல் தமிழரிடையிலே பண்டை நாள் முதலாகவே, “குழவிப்பெண்” கல்யாணம் இருந்துவந்த தாகத் தென்படுகிறது.

“ கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே!
யுறுஅ வறுமுலை மடாஅ
வுண் ணுப பாவைவை யூட்டு வோளே!” (ஐங்குறு. 121.)

என்றது முதலாகவரும் கொண்கப் பத்துப் பத்துப்பாக்களும், தமிழிலே மிகப் பழமையானதாகக் கருதககூடியவை. இது தமிழர் பண்டைப் பழக்கம் என்பதைக் குறிப்பிக்கின்றன.

இதைப்போலவே கைம்மை மகளிர்கொள்ளும் நோன்பும், சககமனம் முதலிய செய்கைகளும் தமிழர்க்குரியவை என்றும், பின்னரே ஆரியர் தமது சாத்திரத்துள் இவ்வொழுக்கம் சிறப் புடையதொன்றெனக் கண்டபின் கோத்துக்கொண்டாரென்றும்

கருத இடமுள்ளது. ஏனெனில், ஆரிய மகளிர்க்கு விதிக்கப்பட்டிருந்த புனர்விவாகம் தமிழ் மக்கள் பலபேரிடைக் காணப்படவில்லை.

"விரிநீ ருடுக்கை யுலகம் பெறினும்,
அருநெறி ஆயர் மகளிர்க்
கிருமணங் கூடுத லில்லியல்பன்றே" (கலித். 114.)

என நிர்த்தாக்ஷிண்யமாகக் கூறுகின்றனள் ஆயர் சிறுமியொருத்தி.

தமிழ் மக்களுக்குள்ளே, பெண்டிர் சாதாரணமாக,

"காதலர் இறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது
இன்னுயி ரீவர். ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்.
நளியெரி புகாஅ ராயின், அன்பரோ
டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்"
(மணிமே. II. 42. 47)

இத்தகை இவர் கொள்கையை மணிமேகலை 16-வது காதையில்வரும் ஆதிரை நல்லாள், ஒள்ளழலீமத்துப் புகுந்தும், திருவின் செய்யோள் போன்றினிதே எரியுருது நின்ற செய்தியறிவிக்கும் கதையானும், கலக்கஞ் சிறிதுங்கொள்ளாது, தன் னுயிர்கொண்டு தன் கணவன் உயிர் தேடிச்சென்றாள்போல நெடுஞ்செழியன், தான் கோவலற்கிழைத்த அபராதம் பொருளுகி உயிர்விடுத்தகாலை யொருங்குடன் மாய்ந்த பெருங்கோப்பெண்டின் சரிதையானும், (சிலப். XXV. 78-86) புறநானூற்றில் வரும் இத்தலைவி பாட்டானும் (புறம் 246) நாம் அறிகிறோம். போதல் செய்யா வுயிருடன் உறைந்து நோற்பன நோக்கு நிற்கும் பெண்டிர், மக்களில்லா திறந்த மாந்தர்க்கு "சிராத்தம்" இடும்வழக்கமும் இவர்க்குள் நிலைத்துவிட்டமை புறநானூற்றுக்கவி வெள்ளெருக்கிலையார்,

"——சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
வின்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்?" (புறம் 234)

என வேள் எவ்வியைக் குறித்துப் பாடி இரங்குமுறையானே புலப்படுத்துகின்றனர்.

இவர் இறந்தார்க் காற்றுங் கருமங்கள் பலவாறாக இருந்ததெனினும், முடிவிலே ஆரியர் ஒழுக்கமான எரியிடுசித்தலை மிகச்

சுத்தமானதெனக் கண்டு அஃனே ஏற்றனர். தாழிகளிலேபோட்டுக் கவித்து வைப்பதான பண்டைப் பழக்கத்தை புறம் 228, 238, 250, 364 முதலியன பாடல்களிற் பரக்கக் காண்கிறோம். மற்றைய இவர் பழக்கச் செய்கைகளை

" சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்,'
(மணிமே. VI. 66-67)

என்ற அடிகள் நமக்கு நன்கு விளக்குவ.

" ஒள்ளெரி நைப்ப வுடம்பு மாய்ந்தது" (புறம் 240) என்றார் பிறரும்.

ரா. வாசுதேவ சர்மா, M. A., B. L.,
Lecturer in Sanskirt, National College, Trichy.

சிறு நீதிக் கதைகள்.

(60-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

3. நாயும் கழுதையும்.

கழுதை ஒன்று, நோயால் வருந்திக்கொண்டு இருந்தது. அது விரைவில் இறந்துவிடும் என்ற வதந்தி எங்கும் பரவியது. இச்செய்தியைக் கேட்ட சில நாய்கள், க்ஷேமம் விசாரிப்பதற்காகக் கழுதையிருக்குமிடம் சென்று, மெதுவாய்த் தூரத்தில் வெளியே நின்றவண்ணமே, "அன்புள்ள நண்பரே! தங்களுக்கு உடம்பு எப்படி இருக்கிறது" என்று கேட்டன. அவற்றின் நோக்கத்தை நன்கறிந்த குட்டிக் கழுதை, வெளியேவந்து, "ஐயன்மீர்! என் தாய்க்கு நீங்கள் விரும்பி எதிர்பார்க்கும் நிலைமை இன்னும் ஏற்படவில்லை" என்று சொல்லியனுப்பிற்று.

நீதி:—தம் நயம் கருதிப் பிறர்பாற் செல்லும் அற்பர் அவமான முறுவர்.

4. பூனையும் கோழியும்.

ஒரு சமயம், பூனை ஒன்று, ஒரு கோழியைக்கொன்று தின்ன எண்ணிற்று. அதுமறைந்திருந்து அக்கோழியைக் கவ்விப்பிடித்தது. கோழி "அன்ப! என்னைக் கொல்லாதே; நான் யாவர்க்கும் நன்மையே செய்பவன். நான் அதிகாலையில் உரக்கக் கூவுவதாலேயே ஜனங்கள் விழித்துக்கொண்டு தம் காரியங்களைச் செய்யத் தொடங்

குவார்கள்." என்றது. பூனை, "அப்படியா? நீ தினம் கூவும் காரணத்திற்காகவே உன்னைக் கொல்லப் போகிறேன். பிரதி தினமும் பிராணிகள் தூக்கத்தைக் கலைக்கிறாய். அதற்காகவே உன்னை முதலிற் கொல்லவேண்டும்." என்றது. கோழி, "ஐயா! என்னசெய்வேன்! கூவுவது எங்கள் இயற்கை. உம்மைத்தவிர அதன்பொருட்டு இதுவரைக் குறை கூறினவர் இல்லையே" என்ன, பூனை, "இருக்கலாம். உங்களைக் கொல்வது எம் இயற்கை. நன்மையடைபவர்கள் உன்னை வாழ்த்தட்டும். நான் நின்னால் உற்றது தீமையே. போதும் உன் விசித்திரப் பேச்சு. மூடிவாயை. நீ சென்றது தீநெறி. ஆதலின் உனக்கு நேரவேண்டியது மரணமே" என்றுகூறி, அதனைக்கொன்று தின்றுவிட்டது.

நீதி :—தீயோனிடம் நியாயம் கிடைத்தல் அரிது.

5. அரசனும் பண்டிதனும்.

அரசன் ஒருவன் ஒரு புதிய தோட்டத்தில் மண்டபம் ஒன்று கட்டுவித்துப் பொழுதுபோக்கின் நிமித்தம் தன் இஷ்டபந்துஜனங்களோடு அங்கேசென்றான். சென்றவன் சம்பிரமமாக விருந்துண்டு, யாவரும் ஆனந்தத்தில்மூழ்கி இருக்கும்பொழுது, எல்லாரையும் பார்த்து, "உங்களில் யாருக்கு எந்த மரஞ்செடிகளில் ஆசை?" என்றான். ஒருவன் 'தாழைமரம்' என்றான். மற்றொருவன் 'சண்பகம்' என்றான். வேறொருவன் 'ரோஜா' என்றான். இன்னொருவன் 'மல்லிகை' என்றான். பின்னொருவன் 'பாதிரிதான்' என்றான். இவ்வாறு ஒவ்வொருவரும், புஷ்பச்செடிகளையே விரும்பிக்கூற, அரசன் அருகேயிருந்த ஒருபண்டிதனை நோக்கி" "உமக்கு யாதுவிருப்பம்?" என்றான். 'யான் விரும்புவது தென்னையே' என்றான் புலவன். இதைக்கேட்ட மன்னவன் மகிழ்ச்சியெய்தி, "ஐயா! பண்டிதர் என்ற பட்டம் உமக்குத்தகும். எப்பொருளும் பயனின்றேல் வீண் பொருளேயாம். உபயோகமற்ற மரஞ்செடிகளை உம்மை ஒழிந்த பிறர் விரும்பிக்கூறியதற்குக் காரணம் அவர்கள் அறிவின்மையே" என்று கூறிப் பண்டிதனைக்கொண்டாடி அவனுக்கே பரிசளித்தான்.

நீதி:—மனிதர் மனம் பெரும்பாலும் அநித்தியமும் பகட்டுமான விஷயங்களை பற்றுகின்றனவே யன்றி, பலருக்கும் பலபொழுதும் பயன் தரும் பொருள்களைப் பற்றுவதில்லை.

பண்டித: M. M. நாராயணசாமி ஐயர், முடிகொண்டான்.

மாண்டவன் மீண்ட மாயம்.

இருபத்தாறவது அத்தியாயம்.

சம்புப் பரதேசியின் பூர்வ ஆச்ரமம்.

(The Secrets of Sambhu)

மறுநாள் மாலையில் ராமஸ்வாமியும் கைலாஸமும் தாம் முறையே பலராமனைக் கண்டுபேசிய விஷயத்தையும், பத்மவிலாஸத்தில் கேட்ட அதிசயங்களையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்தக் கேஸினால் ஏற்பட்ட கவலையால் ராமஸ்வாமியின் தேகம் மெலிந்துபோயிற்று. கைலாஸமோ எடுத்த காரியத்தைவிடக் கூடாது என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவனாய் மேன்மேலும் உற்சாகமாகவே பேசலானான். ராமஸ்வாமிக்கோ, மேலே முயற்சி செய்து பார்க்கச் சிறிதும் மனம் செல்லவில்லை. இருவரும் வெகு நாள் சிநேகர்களானதால்தான், இந்த விஷயத்தில் சச்சரவில்லாமல் ஒத்துழைத்தார்கள்.

கைலா:—"(சிரித்துக்கொண்டு) என்ன ராமஸ்வாமி! இவ்வளவு அதைரியப்படுகிறாய்? ஏரைக் கட்டியாயிற்றானால் உழாமல் வெளியேறுவார்களா?"

ராம:—"ஏர் நகர்ந்தால்தானே உழலாம்?"

கைலா:—"எல்லாம் நகரும். நான் பத்ம விலாஸத்தில் நடந்ததைச் சொன்னேனே. கவனித்தாயல்லவா?"

ராம:—"ஆம் அதிலிருந்து ஒன்றும் தெரியவில்லை. எவனோ கிறுக்குமுத்தன் சொன்னதை வைத்து நீயும் 'ஒருவேளை சிதம்பரம் தான் கொன்றிருப்பார்' என்கிறாய். மறுபடியும் 'தர்மராஜனாகத் தான் இருக்கலா'மென்கிறாய். இப்போது சங்கரன் அகப்பட்டான். உனக்கோ புத்தி ஸ்திரமில்லை. கொஞ்சமாவது சரியான சாக்ஷியம் அகப்படவில்லை".

கைலா:—"நீ சொல்லுவது தவறு. இங்கே மிதமிஞ்சிய சாக்ஷியம் கிடைத்திருப்பதால் பிரமையாயிருக்கிறதேயொழிய சாக்ஷியக் குறைவாலல்ல. பார்! ஒவ்வொருவர்மேலுமுள்ள அநுகூலப் பிரதிகூல ஸாக்ஷியங்களை வரிசையாய்ச் சொல்லுகிறேன். கவனித்துப் பிறகு, உன் அநுமானத்தைச் சொல்".

ராம:—"அநுமானத்துக்கென்ன ?. என்னவேண்டுமானாலும் ருஜுப்படுத்தலாம். தார்க்கிகரின் வாயிலகப்பட்ட காக்கையும் வெள்ளையாகும் !"

இத்தருணத்தில் தபாற்காரன் ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுத்தான். அதில்,

" அன்புள்ள ராமஸ்வாமிக்கு,

நீ நேற்று எழுதிய கடிதம் கிடைத்தது. உன் அம்மாமிக்கு அசதியாயிருப்பதால் அவ்விடம் நான் வரமுடியவில்லை. ஆனால் நீ கேட்டுக்கொண்ட விஷயத்தைப்பற்றிச் சம்புவுக்கும் எழுதியிருக்கிறேன். நாளைத்தினம் மாலை $6\frac{1}{2}$-மணிக்கு நீ மாத்திரம் போய்ப் பார். அவர் மிகவும் நல்ல மனிதர். அதிகமாய் மற்றவர்களோடு பேசக்கூடியவரல்லர். என்னை உத்தேசித்தே உன்னோடு பேசச் சம்மதித்திருக்கிறார். அவர் மனம் வருந்தும்படி ஒன்றும் செய்யாதே.

மதுரை, } 2—5—05. } உன் அன்புள்ள, சிதம்பரம்"

இதை வாசித்த இருவருக்கும் ஒன்றும் தோன்றவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

ராம:—"கைலாஸம்! என்ன நினைக்கிறாய் ?"

கைலா:—"(தலையைச் சொறிந்துகொண்டு), என் புத்திக்கு ஒன்றும் ஏறவில்லை சம்புவை, நீ பார்த்த பிறகு எல்லாம் நாளைத்தினம் யோசித்துக்கொள்வோம்"

மறுநாள் மாலை ராமஸ்வாமி மடத்துத் தோட்டத்தருகே வந்து சேர்ந்தான். தோட்டவாசலில் பலராமன் காத்துக்கொண்டிருந்தான். ராமஸ்வாமியை அவன் பார்த்ததும், அவன் உதடுகளும், அவயவங்களும் படபடவென்று துடித்தன. என்றுமில்லாத பரபரப்புக் கண்களில் காணப்பட்டன. இவற்றையெல்லாம் கவனித்த ராமஸ்வாமி, பலராமன் தன் வரவைத்தான் எதிர்பார்த்திருக்கிறான் என்று தீர்மானித்து, அவன் அருகில் சற்று நின்றான். அப்போது,

பல:—"(தட்டத்தடன்) எசமான்! உள்ளே பெரிய எசமான்க உங்கள் வரவை எதிர்பாத்துக்கொண்டிருக்காங்க"

ராம:—"(வியப்புடன்) என்னப்பா ! நான் எஜமானனா ?"

பல:—" ஓஹோ ! மறந்துவிட்டேன். வயதாகிறது. புத்தி தடுமாறுகிறது".

ராம:—"ஆனல் நீ சங்கரன் இல்லை என்று சொல்லுகிறாய்?"

பல:—"அதைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்வோம். எஜமாங்க உள்ளே உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்காங்க."

ராம:—"(உட்சென்றுகொண்டே) சங்கரா! நீ என் தகப்பனர் வேலைக்காரன் என்பது நிச்சயந்தான். ஆனலிப்போது உன் யஜமானன் யார் என்றுதான் தெரியவில்லை"

சம்பு தன் முகவிகாரம் ராமஸ்வாமிக்குத் தெரியாதபடி சற்று இருண்ட இடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார். ராமஸ்வாமி வந்ததும், "வா, அப்பா ராமஸ்வாமி! இப்படி உட்கார்" என்று ஓர் ஆசனத்தைக் குறிப்பிட, அதில் ராமஸ்வாமி அமர்ந்தான். ஆனல் அந்த ஆஸனமானது ராமஸ்வாமி முகத்தில் மாத்திரம் வெளிச்சம் படும்படி ஜன்னலைப் பார்த்துப் போடப்பட்டிருந்தது. அதன் நுட்பத்தை ராமஸ்வாமி கவனிக்கவில்லை.

சம்பு:—"என் சிநேகர் வக்கீல் சிதம்பரம் எழுதினர், நீ பார்க்க விரும்புகிறாயென்று—சந்தோஷம்".

ராம:—"தாங்க ளிந்தமட்டில் சம்மதித்தது என் அதிர்ஷ்ட விசேஷம் தான்".

சம்பு:—"என் சிநேகரை உத்தேசித்துத்தான் சம்மதித்தேன். நான் உன்னைப் பார்க்க இன்னொரு காரணமுமுண்டு; எல்லாம் இந்த 'நாவல்' சம்பந்தமாகத்தான். நம் குட்டி சங்கரி ஸபாபதிக்குச் சொன்னதுதான்—".

ராம:—"ஆமாம். என் தகப்பனர் கொலை ஸமாசாரத்தைப் பற்றிய பத்திரிகை இந்த மடத்துச் சேர்ந்தியிலிருக்கிறதாம். எல்லாம் தெரிந்துகொண்டேன்".

சம்பு:—"அந்தப் பத்திரிகை என் வசத்திலிருப்பது உனக்கு ஆச்சரியமாய்த் தோன்றவில்லையா?"

ராம:—"(சம்புவே இந்த விஷயத்தைப்பற்றிப் பேசுவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு) ஆமாம். அதை உத்தேசித்துத்தான், தங்களைக் கேட்கலாமென்று வந்தேன்".

சம்பு:—"என்னல் என்ன சொல்ல இயலும்?"

ராம:—"ஏன், உங்களுக்கு ஸமாசாரம் முழுமையும தெரிந்திருக்கலாமே! சங்கரன், 'பலராமன்' என்று பெயர்வைத்துக் கொண்டு உங்களிடத்திலிருக்கிறு னல்லவா?"

" சம்பு:— அது எப்படி உனக்குத் தெரியும்?"

ராம:—" நாவலின் மூன்றும் பாகத்தில் விசாரணையில் வராத டப்பி ஸமாசாரம் சொல்லப்பட்டிருக்கிறது. சங்கரிக்கு டப்பி சமாசாரம் சொன்னது பலராமன்தான். டப்பி சமாசாரம் சங்கரனுக்கும் சிதம்பரத்துக்குந்தான் தெரியும். ஆகையால் சங்கரன்தான் பலராமன்".

சம்பு:—" இதைப்பற்றிப் பலராமனைக் கேட்டாயா?"

ராம:—" பலராமன் நம்பிக்கையான வேலைக்காரன். அவன் எப்படிச் சொல்லுவான்?"

சம்பு:—"கொலையைப்பற்றிய பேச்சு எதற்கு?"

ராம:—" அதுதானே முக்கியமான விஷயம். என் தகப்பனரைக் கொன்றவனைக் கண்டுபிடித்து—"

சம்பு:—" ஆம்! அன்புள்ள பிள்ளையின் கடமை இதுதான். ஆனல் இருபது வருஷத்துக்குப் பிறகு என்ன தெரியப்போகிறது? எனக்கும் ஆவல்தான்—"

ராம:—" தங்களுக்கும் இந்த விஷயத்தில் என்ன ஆவல்?"

சம்பு:—" உன்னைக்காட்டிலும் அதிக ஆவல் எனக்குத்தான். நான் யார் தெரியுமா?"

ராம:—" தர்மராஜுவாகத்தா னிருக்கவேண்டும் தாங்கள்."

சம்பு:—" (பதட்டத்துடன்) தர்மராஜுவா? குழந்தாய்! நானும் தர்மராஜுவல்ல. கொலைசெய்தவனும் தர்மராஜுவல்ல"

ராம:—"ஒருவேளை சிதம்பரம்தான் கொலை செய்திருப்பரோ.?"

சம்பு:—"ஆ! சிதம்பரமா?"

ராம:—"இதெல்லாம் அனுமானந்தான். நானும் என் சிநேகன் கைலாசமும் செய்த விசாரணையில், ஒருவர்போக ஒருவர்மேல் சந்தேகம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது."

சம்பு:—" அந்தக் கதையெல்லாம் என்னிடம் சொல்லவேண்டாம். எனக்கென்னவோ வேதனையாயிருக்கிறது"

என்று இவ்வாறுகூறி சம்பு உடனே பெட்டியைத் திறந்து ஒரு கடிதத்தை எடுத்து, ராமஸ்வாமி கையிற்கொடுத்து " அப்பா! என்னை ஒன்றும் கேளாதே. எனக்குத் தெரிந்ததெல்லாம் இதிலிருக்கிறது. பார்த்துக்கொள் என்னல் ஒன்றும் பேசமுடியாது" என்று சொல்லி எழுந்தார்.

ராம:—"(எழுந்து கடிதத்தை உடைப்பையில் பத்திரப்படுத்திக்கொண்டு உற்சாகத்துடன்) ஆனாலிந்தக் கொலை ஸமாசாரம் உங்களுக்கு நேரிலே தெரியும் என்று சொல்லுங்கள்."

சம்பு:—"(பதட்டத்துடன், ராமஸ்வாமி முதுகைத்தட்டி) அப்பா! என்னை ஒன்றும் கேளாதே என்னவோ வேதனை செய்கிறது. நான் யார் என்று இன்னும் நீ அறியவில்லையா?"

ராம:—"தெரியவில்லையே. தாங்கள் தர்மராஜாவென்று தான் நினைத்தேன்."

சம்பு:—"நான் தர்மராஜாவல்ல. தர்மராஜா இறந்துபோனான்."

ராம:—"இறந்துபோனானா?"

சம்பு:—"ஆமாம் அப்பா! கொலைசெய்யப்பட்டு இறந்தான். இன்னும் உனக்குத் தெரியவில்லையா? ராமஸ்வாமி! மங்கள புரத்துக் கொலையில் இறந்தது தர்மராஜாவே ஒழிய, சோழவல்ல."

ராம:—"ஆ! ஆ!! அப்படியானால், தாங்கள்—?"

சம்பு:—"நான்தான் உன் தகப்பனார்."

இருபத்தேழாவது அத்தியாயம்.

சம்புவின் விஞ்ஞாபனம்.

Sambhu's Revealations.

கைலாசம் தன் ஆபீஸ் அறையில் இராமஸ்வாமியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மேசைமேல் வெள்ளிக் கூஜா நிறையக் காய்ச்சின பாலும் பக்கத்தில் இரண்டு வெள்ளி டம்ளர்களும் வைக்கப்பட்டிருந்தன. கூஜாவைத்தொட்டு 'இன்னும் சுடுகிறது' என்று கூறி அவ்வறையில் அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருந்தான். சுவரில் மாட்டியிருந்த பெரிய கடிகாரம் 'டாங் டாங்' என்று 9-மணியடித்தது. முன்தாழ்வாரம் சென்று ராமஸ்வாமி வருகிறானோவென்று எட்டிப்பார்த்தான். "இவ்வளவு நேரமாயும் வரவில்லையே. விசேஷம் என்னவாயிருக்கலாம்? ஒருவேளை சம்புவே தர்மராஜா என்று அறிந்துவிட்டானோ? தர்மராஜா தன் குற்றத்தை ஒப்புக்கொண்டிருப்பானோ?" என்ற பலவிதமான கேள்விகள் அவன் மனதில் உதித்தன.

இதற்குள் அறையின் கதவு திடீரென்று திறக்கப்பட்டது. ராமஸ்வாமி உள்ளே நுழைந்தான். கைலாஸம் புன்சிரிப்புடன் ராமஸ்வாமியை ஆவலாய் எதிர்கொண்டு வந்தான். ஆனால் ராமஸ்வாமியின் வெளுத்த முக விகாரத்தைப் பார்த்தவுடன் கைலாஸத்தின் சிரிப்பு மாறிவிட்டது. பதைபதைப்புடன், "ராமஸ்வாமி! என்ன விசேஷம்?" என்று கேட்டான். பிறகு சற்றுச் சமாதானமடைந்து, "இருக்கட்டும். இந்தப்பாலேச் சாப்பிடு. பின்பு பேசிக்கொள்ளலாம்." என்று சொல்லி ஒரு டம்ளரில் பாலெடுத்துக்கொடுத்துவிட்டுத் தானும் ஒரு டம்ளர் பாலெடுத்து அருந்தினான். பிறகு இருவரும் சிறிதுநேரம் மௌனமாய் அமர்ந்திருந்தார்கள்.

கைலா:—"(ஆவலுடன்) என்ன ஒருமாதிரியாய் இருக்கிறாய்? ஏதாவது விபரீதமாய் முடிந்ததா? சம்பு ஏதாவது சொன்னாரா? என்ன நடந்தது?"

ராம:—"சம்பு என்றவரே இல்லே."

கைலா:—"ஆ! ஆ!! நான் சொன்னது சரியாய்விட்டதா? சரி. சரி. அப்பொழுதே பேர்மாறாட்டமென்றேனே? அப்படியானால் சம்பு என்பவர் யார்?

ராம:—"என் தகப்பனார்"

கைலாஸத்துக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லே. மேலே வேறொன்றும் சொல்ல நாவெழவில்லே. கடைசியாக, "என்ன! என்ன? நிஜந்தானா? ஏதாவது உனக்குப் பிரமை ஏற்பட்டதா?" என்று பரபரப்புடன் வினவினான்.

ராம:—"சுயபுத்தியோடுதான் சொல்லுகிறேன். இறந்தது தர்மராஜா. பிரேதம் தர்மராஜாவின் பிரேதமே. ஊகித்து விகாரமாய்ப்போனபடியால் அது என் தகப்பனார் பிரேதமென்று ஊகிக்கப்பட்டது. பயந்து ஓடிப்போனது என் தகப்பனார். 'சம்பு' என்பவர் என் தகப்பனாரே" என்று சுருக்கமாய்ச் சொல்லித் தான் கொண்டுவந்த கடிதத்தைக் கைலாஸம் கையிற் கொடுத்தான். கைலாஸம் மெய்மறந்துபோனான். ராமஸ்வாமியையும் கடித விஷயத்தையும் மாறிமாறிப் பார்த்தான். அவனுக்குத் தன் புத்தியை ஒருவிதமாய்ச் சுவாதீனம் செய்து கொண்டு பதில் சொல்ல சற்று நேரமாயிற்று. கடைசியாக "என்ன! என்ன ஆச்சரியம்! உன் பெற்றோர் இருவரும் இறந்ததாய் எண்ணியிருந்தாய். இப்பொழுது

அவர்களிருவரும் உயிருடனிருக்கிறார்கள்!—நல்லது, உன் தாயார் உயிருடனிருப்பதை உன் தகப்பனாருக்குத் தெரிவித்தாயோ?"

ராம:—"அந்தச் சமயத்தில் எனக்கொன்றும் சொல்லத் தோன்றவில்லை. இக் கடிதத்தை என் கையில்கொடுத்து, வாசித்துப் பார்த்துப் பிறகு, 'வேண்டியபடி செய்து கொள்' என்று சொல்லி விட்டு என் தகப்பனார் மனோவிசாரத்துடன் படுக்கையறைக்குச் சென்றார். அப்படியே கடிதத்தை எடுத்துவந்து உன் கையிற் கொடுத்தேன். இதை வாசி. கேட்கிறேன்"

கைலா:—"(பரிதாபத்துடன்) பிறகு வாசித்துக்கொள்வோம். நீ பட்டினியாயிருக்கிறாய். கீழேபோய்ச் சாப்பிட்டுவா"

ராம:—"(விசனத்துடன்) எனக்கு ஒரு பிடிசாதம்கூட இந்த நிலைமையிற் செல்லாது. அதை முதலில் வாசி"

கைலாஸம் பின்வருமாறு வாசிக்க ஆரம்பித்தான்:—

"என் அருமைக் குழந்தை ராமஸ்வாமிக்கு,

"நான் இந்த நிலைமைக்கு வந்த விதத்தை உனக்கு இப்பொழுது தெரிவிப்பதாய்த் தீர்மானித்துவிட்டேன். முதலாவது நீ செய்திருக்கும் சபதமும், இரண்டாவது 'விதியின் பயன்' என்ற நாவல் வெளியானதும், மூன்றாவது என் உயிர் நண்பனை சிதம்பரத்தின் போதனையுமே, என்னைப் பற்றிய உண்மையை இவ்வாறு துணிந்து வெளியிடச்செய்து விட்டன. எனக்குத் தெரிந்ததைத் தெய்வமறிய உண்மையாய்ச் சொல்லுகிறேன். இதை வாசித்தபிறகு, உனக்கு என்ன தோன்றினாலும் சரி.

"உன் தாயார்மேல் அபவாதம் கற்பிக்கிறேனென்று எண்ணாதே. ஏதோ தெய்வச்செயலால் எங்களிருவருக்கும் பிடிக்கவில்லை. மற்ற உலகத்தாரைப்போல் அரைக்ஷணமாவது அன்புடன் நாங்கள் மனமுவந்து வாழவில்லை. தர்மராஜாவை விவாகம் செய்யாமற் போனது தன் துர்ப்பாக்கியமென்று அவள் எத்தனையோ தடவை என்னிடமே சொல்லியிருக்கிறாள். என் மனம் எவ்வளவு வருத்தமடைந்திருக்கும்! நானும் எவ்வளவோ கோபித்துப் பார்த்தேன். நீ பிறந்தபிறகுகூட அவள் குணம் மாறவேயில்லை.

"நம் குடும்பம் குலைந்ததற்கு முதலாவது காரணம் நாங்களிருவரும் ஒத்துவாழாமையே. இரண்டாவது, பிச்சைப் பெட்டியில் சனியன் புகுந்ததுபோல் தர்மராஜு என்பவன் மங்களபுரத்தில் தனக்கேதோ காரியமிருப்பதாய்ச் சொல்லிக் கொண்டு உன் தாயாரிடம் அடிக்கடி வரத்தலைப்பட்டான்.

"இவன் அடிக்கடி வருவதையும் கண்டித்தேன். உன் தாயாருக்கு அவனை இப்படிக் கண்டித்தது பிடிக்கவில்லை. தர்மராஜு, நிறம், உயரம், பருமன் முதலியவைகளில் என்னைப் போலவே இருப்பான். ஆனால் நான் சாதாரணமாய் டாம்பிக மில்லாமல் இருப்பேன். அவன் டம்பமாயும் தமாஷாயும், விடனாகவும் இருப்பான். உன் தாயாருக்கு இந்தமாதிரி ஆடம்பரங்களில் அதிகப்பிரியம். ஆகையால் அவனைக் கண்டதும், உன் தாயார் அவனுடன் பிரியமாய்ப் பேசுவதும், ஸரஸமாய் இருப்பதுமாயிருந்தாள். என் சொத்தை மாத்திரம் உத்தேசித்து எனக்குத் தன்னைக் கல்யாணம் செய்துகொடுத் தார்களென்று அவள் பலதடவை சொல்லி முறையிட்டிருக் கிறாள். இவையெல்லாம் கண்டித்துவந்தேன்

"கடைசியாக என் நண்பன் சிதம்பரம் மூலமாய், தர்ம ராஜு அடிக்கடி வருங்காரணம் தெரியவந்தது. தர்ம ராஜுவுக்கு உன் தாயார்மேல் காதலில்லை என்றும், வேலைக்காரி சீதையிடமே அவனுக்கு மிகப் பற்றுண்டென் றும், அறிந்துகொண்டேன். சங்கரன் பழகின வேலைக் காரனானதாலும் அவனுடைய தங்கை சீதையானதாலும், அவனுக்குத் தெரிந்தால் முன்கோபத்தால் முரட்டுத்தனமாய் தர்மராஜுவை ஏதாவது செய்துவிடுவான் என்று பயந்து அவனிடம் நான் ஏதும் தெரிவிக்கவில்லை. உன் தாயாரிடமும் தெரிவிக்கவில்லை. ஆனால் அவளுக்கு யாதொரு அவமானமும் ஏற்படாமலடக்கிவிடவேண்டுமென்று மனதில் எண்ணிக் கொண்டு, தர்மராஜுவருவதை அடிக்கடி கண்டித்தேன். எங்களிருவருக்குமுள்ள விரோதம் தர்மராஜுவுக்கும் என் மனைவிக்குமுள்ள நேசத்தால்தானென்று ஊரில் பலத்த அப வாதம் உண்டாய்விட்டது.

"இந்த நிலைமையில் கொலைக்கு முந்திய மாலையில், எனக்கும் தர்மராஜுவுக்கும் பகிரங்கமாகவே கலகம் நேர்ந்து

விட்டது. நான் கோபித்துகொண்டு மதுரைக்குப்போய் விட்டேன். அன்றிரவுநடந்த விருத்தாந்தங்களை என் நண் பனுக்குத் தெரிவித்தேன். இரவில் நாடகம் பார்த்துவிட்டு, நானும் சிதம்பரமும் மறுபடி மங்களபுரம் திரும்பிவந்தோம். சிதம்பரம், பலவிதமாகச் சமாமானஞ்சொல்லி, என் மனைவிக் குப் புத்தி சொல்லி வேண்டிய ஏற்பாடு செய்வதாய் என்னை யழைத்துவந்தான். 'பத்மவிலாஸம்' வந்து சேர்ந்ததும், வெளியே சிதம்பரத்தை இருக்கச்செய்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்தேன். இரவு சுமார் 3-மணியிருக்கும். சீதையைக் கண்டேன். தான் கர்ப்பிணியாயிருப்பது மெய்தானென்றும், அதற்குக் காரணம் தர்மராஜூதானென்றும், இந்த ஸமாசார த்தை வெளியிடாமலும் தன் தமயனுக்குத் தெரிவியாமலும் தன்னைக் காப்பாற்றவேண்டுமென்றும், என்னைக் கெஞ்சினுள். நான், வெளியில் சிதம்பரம் காத்திருப்பதாயும் அவர்கூடச் சென்றால், மதுரைப் பிரசவ ஆஸ்பத்திரியில் ரகஸ்யமாய்க் கொண்டுபோய் விடுவாரென்றும், பிறகு சுகப்பிரஸவமான பிறகு மேலாக வேண்டியதை யோசித்துக்கொள்ளலாமென் றும் சொன்னேன்.

"இதற்குள் உன் தாயார், வாசலில் தர்மராஜூவை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்து, நாங்கள் பேசிக்கொண்டி ருப்பதைப் பார்த்து ஏதோ சந்தேகங்கொண்டு, கண்டபடி சத்தம் போட்டாள். இதற்குள் சீதை மெள்ள வெளியேறி விட்டாள். உன் தாயார், அந்த வீட்டில், தான், இனிமேல் இருப்பதில்லை யென்றும், எங்கேயாவது ஓடிப்போவதாயும் சொல்லி வெளிப்புறப்பட்டாள். நான் மானத்துக்குப் பயந்து அவளை உள்ளே தள்ளிக் கதவை யடைத்துக்கொண்டு தோட்டத்தில் நிற்கும் சிதம்பரத்தை நோக்கி வந்தேன்.

"வரும் வழியில் பிரேதமொன்று காலில் அகப்பட்டது. உடனே சங்கரனை விளக்குக் கொண்டுவரும்படியழைக்க அவ னும் வந்து சேர்ந்தான். தர்மராஜூ கத்தியால் குத்துப்பட் டுக் கீழே பிணமாய்க் கிடக்கக் கண்டேன். நான் சத்தம் போட்டிருப்பேன். ஆனால் என் வேலைக்காரன் புத்திசாலி யானதால் என்னைத் தடுத்துவிட்டான். தர்மராஜூவின் மா ணச் செய்தி அப்போது வெளியானால், எனக்குத் தவறாமல்

கேடுபிடித்தே இருக்கும்" எனெனில் எங்களிருவருக்குமுள்ள விரோதத்தாலும், அந்தச் சமயத்தில் என் தேகமெல்லாம் இரத்தமாயிருந்ததாலும் நானே தர்மராஜுவைக் கொலை செய்ததாக ஏற்பட்டுவிடுமென்ற பயமுண்டாயிற்று. சங்கரனுக்கு என்மேல் சந்தேகமுண்டோ என்னவோ? ஆனால் என்னைக் காப்பாற்றினது அவன் தான். நாங்களிருவரும் பிரேதத்தை ஆற்றில் கிடத்திவிட்டோம். சிதம்பரம் ஒருவனைத் தவிர மற்றொருவருக்கும் நான் அன்றிரவு மங்களபுரம் திரும்பி வந்தது தெரியாது. சினையும் ஓடிப்போய்விட்டாள். வீட்டைச் சங்கரனிடம் ஒப்புவித்துவிட்டு என் மனைவியைத் திரும்பிக் கூடப் பாராமல் ஓடிப்போய்விட்டேன். தைரியமில்லாமல் தான் ஓடினேன். ஆனால் அந்த நிலைமையில் நான் அங்கே இருந்திருந்தால் தூக்குக்குப் போயிருக்க வேண்டியவன்தான். விதிப்படி நடக்கட்டுமென்று நினைத்து ஓடிவிட்டேன். பிறகு நடந்த ஸமாசாரம் உனக்கே தெரியும். ஆனால் உன் தாயார்மேல் அவளுக்கு விரோதமாகத் தீர்ப்பாகும் விஷயத்தில், நானே நேரில்போய்த் தெரிவித்துக் கொள்ளலாமென்று தான் நினைத்திருந்தேன்.

"மஹானுபாவன் சிதம்பரம்தான், உன் தாயாரையும் தப்புவித்தான். உன்னையும் வளர்த்தான். என் சொத்தையும் மேல்பார்த்து என் ஸமாசாரமும் வெளியே வாராமல் என்னைச் சென்ற இருபது வருஷமாக காப்பாற்றி வருகிறான். நானிப்படியே இருந்து காலஞ்செலுத்தலாமென்றிருந்தேன். மறுபடி இதெல்லாம் வெளியாகத் தலைப்பட்டுவிட்டது. தர்மராஜுவைக் கொன்றவனைக் கண்டுபிடிக்க முயல்வதிற் பயனில்லை. என் மனதிலுள்ளவைகளைத் தெய்வஸாக்ஷியாய்ச் சொல்லிவிட்டேன். இனிஉன் இஷ்டம்: ரக்ஷித்தாலும் நீதான்; பக்ஷித்தாலும் நீதான்.

உன் அன்புள்ள தகப்பனார்,
சோமு."

R. S. நாராயணசாமி ஐயர் B.A., B.L.

பராந்தகன்.

(71-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உக்ர:—(மிக்க கவலையும் அச்சமுந்தோன்ற) நீதிபாலர் எங்கேதான் போயிருப்பார்? நம்முடன் ஆலயத்துக்குப் புறப்பட்டவர், தாம் இன்ன இடம்போய் வருவதாகச் சொல்லிக்கொள்ளக்கூட இல்லையே.

மந்திரிமார்கள்:—(ஒருவருக்கொருவர்) மகாராஜா இவ்வளவு ஆத்திரத்துடன் விசாரிப்பதைப் பார்த்தால் ஏதேனும் முக்கிய சம்பவம் நிகழ்ந்திருக்குமென்று தோன்றுகிறது.

உக்ர:—ஆம். உண்மையே. அது சாமானிய சம்பவமன்று. மகத்தான ஒரு விபத்து: மங்கையர்க்கரசியும் உங்கள் மகாராஜாவும் நமன் வாயினின்று தப்பினுர்கள். நமது ராஜதானி இவ்வாறு கொடுங்கொலையும் படுபாவமும் நிறைந்த பாழூராய்விடுமென்று நாம் கனவிலும் கருதியதில்லை

மதி:—மகாராஜா! விஷயமென்ன? உத்தரவாகலாமோ?

உக்ர:—ஸ்வாமி தரிசனத்திற்குத் துணையின்றியும் செல்லாமல், தக்க மெய்காவலருடனும் பரிவாரங்களுடனும்போய் நாங்கள் திரும்புவதற்குள், ஆ! ஆ!! சொல்ல நாவெழவில்லையே! நீதிபாலரும் வரட்டும், அறிவிக்கிறேம்.—கருணுகரரே! அவர் எங்கிருந்தாலும் தேடிக்கொணர ஆள் அனுப்புமே

சேவகன்:-(மதிவாணனைக் கும்பிட்டு) வந்துட்டாங்க பெரிய மந்திரிங்க சமயம் தெரிஞ்சுவர அனுப்பிச்சாங்க.

உக்ர:—யார்? நீதிபாலரா? வரச்சொல் உடனே.

[சேவகன் போகிருன். நீதிபாலன் வருகிருன்]

வாரும் நீதிபாலரே! வயது உமக்கு 100. இப்பொழுதுதான் உம்மைப்பற்றிப் பேசி வாய் மூடினேம்; வந்துவிட்டீர் உடனே. நம்முடன் புறப்பட ஆயத்தமாயிருந்த நீர், திடீரென அந்தர்த்தானமானதென்ன? உமக்காக வெகு நாழிகை காத்திருந்தோம். ஆலயத்திற்காவது வாது சேர்வீரென எண்ணினேம். அங்கும் நீர் வரவில்லையே!

நீதி:—என் விஷயத்தைக் கடைசியில் விண்ணப்பித்துக்கொள்ள மகாராஜா உத்தரவு கொடுக்கவேண்டும். மகாராஜாவின் இவ்வளவு பதைபதைப்பிற்குக் காரணம் யாதோ?

உக்ர:—ஆம். நடுங்குகிறது நம் தேகம். அருகே வாருங்கள் யாவரும். ஒரு பயங்கர சமாசாரம். நீதிபாலரே! உள்ளபடியே குழந்தையும் நாமும் இன்று நமன் வாயினின்று தப்பிப் பிழைத்தோம். எங்கள் இருவர் உயிரும் அரைநொடியில் போக இருந்தது. ஒரு கிழவி—கட்டுக்கழுத்தி—தீர்க்கசுமங்கலி—தள்ளாடித் தள்ளாடிவந்து, அரமனை நோக்கி வந்துகொண்டிருந்த ரதத்தை மறித்து நிறுத்திக், கைந்நடுங்கக் கால்நடுங்க ஆலத்தி எடுத்துக், குழந்தையை ஆசிர்வதித்து, அவள் கன்னத்தைத்தடவி திருஷ்டிகழித்தாள். அத் தொண்டுகிழவியின் அன்பார்ந்த செய்கைகளையும் ஆசீர்வசனமொழிகளையும் கண்டும் கேட்டும், நாங்கள் ஆனந்த சாகரத்தில் முழுகி இருக்கும் சமயம்,—ஆ! ஆ! என்ன சொல்வது! அவள் தன் கையில் மறைத்துவைத்திருந்த சிறு கட்டாரியால் குழந்தை கழுத்தை நோக்கி, விட்டாள் ஒரு குத்து. அப்பொழுது குழந்தைமீதே கண்ணாயிருந்த பிச்சைக்காரன் ஒருவனுக்கு, யார் செய்த புண்ணியத்தாலோ கட்டாரி தென்பட்டுவிட்டது. அதைக் கண்டதும், அவன், அதிதீவிரமாய் அக் கட்டாரியை ஓங்கித் தட்டிவிட்டான். நாம் உடனே அக் கிழவியைப் பற்றமுயன்றோம். ஆனால், அவள் முன்னிலும் அதிதீவிரமாய்ப் பளப்பளப்பான ஒரு சிறு பட்டயத்தை எங்கிருந்தோ உருவி, நம் மார்பிற் பாய்ச்சித் தன்னைவிடுவித்துக் கொண்டு ஓட முயன்றாள். நல்லவேளையாய்க் கட்டாரியைத் தட்டிவிட்ட அதே ஏழை வீரன், இதையும் கவனித்துத் தன்வலிமிகுத்த இடக்கையால் அக் குத்தைத் தாங்கி இராவிடில், அக்கணமே நம் உயிர் லோகாந்தரம் சென்றேயிருக்கும். அக்குத்து அவ் ஏழை கையில் ஆழத் தைத்து ஏறியதால், கொட்டிய இரத்தம் இவ்வளவவ்வளவல்ல. நாம் அதைக் கண்டதும் மயங்கி விழுந்து, தெளிந்து எழுந்தும் எழாததும், அவனை அரமனை வைத்தியர்பால் அனுப்பினோம். அக்கொலைகாரக் கிழவியிடம் நல்லவேளையாய் ஆயுதம் வேறேதும் இல்லைபோலும். இருந்திருந்தால் சும்மா இருந்திராள் தான் குறித்து வந்த எண்ணத்தை நிறைவேற்றியே இருப்பாள். எங்கள் இருவர் உயிரையும் காத்தருளிய ஏழை உயிரும் போயிருக்கும். அக்கொலைகாரியைப் பிடிக்க, தீரப்புலிகள் ஆயிரக்கணக்கான பேர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தும், அவள் ஒருவர் கைபி

னும் சிக்காமல், எங்கோ பறந்துவிட்டாள் மாயமாய். தள்ளாடித் தண்டூன்றி வந்த தொண்டு கிழவிக்கு இவ்வளவு பலம் எப்படி வந்ததோ! எங்கள் இருவரையும் கொல்ல வேண்டுமென்ற சூழ்ச்சிரம் ஏற்பட்டமைக்குக் காரண மென்னவோ! எல்லாம் மர்மமாகவே உளது. எத்தனை காவலாட்கள் இருந்துதான் என்ன? ஒற்றர்களால உற்ற பயன்தான் என்ன?

[பெருமூச்செறிகிறான்]

மதி:—மகாராஜா! குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா? தன் உயிரையும் வெறுத்துக் கொலை செய்யவே துணிந்து வந்தது கிழவி அல்லள். கிழவி வேடம்பூண்டு வந்த பக்காக் கொலைகாரனே: கிழவியாயின், இவ்வளவு துணிச்சல் இருந்திருக்கமுடியுமா? எவர் கையிலும் சிக்காது தப்பி ஓடவாவது முடியுமா? மெய்காப்பாளரும், வீரரும், பரிவாரமும் சூழ்ந்திருந்தும், அவர்கள் யாவரும் சவத்திற்கும் கேடாயினமை, பரிதபிக்கத்தக்கதே!—மகாராஜாவிற்கு எத்தனை பேர் விரோதிகள் உளர்! பட்டத்தாசையால் உங்கள் இருவரையும் ஒழிக்கத் துணிந்துள்ள படுபாவிகளுக்குப், பணத்தாசை மேலீட்டால் உதவிபுரிய முற்பட்டிருக்கக்கூடிய பேராசைப் பேய்களுக்குக் குறைவுண்டா?

நீதி:—மதிவாணரே! உண்மையே. சற்றுப்பொறும். மகாராஜா மேலே உத்தரவாவதை முற்றும் கேட்போம்.

உக்ர:—நீதிபாலரே! என்ன சொல்வது! அப்பொழுது நீரும் இல்லை. உம்மோடு செல்லும்போதெல்லாம் நமக்கு இம்மியும் அச்சம் உதித்ததில்லை. எவ்வகை ஆபத்தும் நேர்ந்ததும் இல்லை. நீரே நாம் பாதாதிகேச பரிபந்தம் பூணும் உருக்குக் கவசம். ஏதோ தலைதப்பியது தம்பிரான் புண்ணியமாயிற்று. மாயாண்டி செத்தும், அவர்கள் கூட்டம் முன்னிலும் அதிரகஸ்யமாய்ப் பலப்பட்டுவரும் செய்தி நமது ஒற்றர் மூலம் தெரிகிறது இவ்வளவு தெரிவிக்கும் அப்புலிகளுக்கு அவர்கள் உறைவிடமட்டும் அறிய முடியவில்லையாம்! கொலைகாரப் பிசாசுகளின் தொல்லை போதாதென்று "பாதககாதகன்" என்ற பழிகாரப் படுபாவியும் தோன்றியிருக்கிறான். அவனால் நாம் அடைந்துள அவமானமும் அச்சமும் சொல்லிமுடியாது. இந்த விடமே நமது நகரில்

நாளுக்கு நாள் அக்கிரமம் அதிகரித்தால், இக்கிழவயதில் நமக்கு மன அமைதியும் குடிகளுக்கு நலமும் எவ்வாறு உண்டாகும்?

*"மாநிலங்கா வலன் என்பான், மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்,தன் பரிசனத்தால்,
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த் தறம்காப்பான் அல்லனோ?"

இவை நிற்க.—எந்த நிமிஷமும் நம் முழு எண்ணமும் கவலையும், எங்கள் இருவர் உயிரையும் காக்கத் தன்னைத் தானே பலி கொடுத்துக்கொள்ளத் துணிந்து முற்பட்ட ஏழை வீரன் மீதே இருக்கின்றன. அவனை அதி ஜாக்கிரதையாகக் கவனித்துத் தக்கவாறு சிகிச்சை செய்ய உத்தரவிட்டிருந்தும், 'அவன் கதி யாதாயிற்றோ!: அப் படுபாவி பாய்ச்சிய பட்டயம் படு விஷம் தோய்ந்ததோ!' என்று வருந்தித் துவிக்கின்றது நம் உள்ளம்.

நீதி:-தீனதயாளு! அவ்வேழையைப்பற்றிய கவலை அதிகம் தங்களுக்கு வேண்டா. உத்தமோத்தமராகிய மகாராஜாவுக்கே உரிய காலத்தில், உதவிபுரிய, அவன் கொடுத்து வைத்திருந்திருக்க வேண்டும். அதிவிரைவில் அவன் குணப்பட்டுவிடுவான் இதில் சந்தேகமே வேண்டா. அவனுக்கு மலைபோல் வந்த மகத்தான விபத்து, பரிதிமுன் பனிபோற் பறந்தோடி விட்டது என்றே எண்ணுங்கள். இதில் மகாராஜாவுக்கு சமுசியம் இருந்தால், அரைக் கணத்தில் அவனை மகாராஜா திருமுன் கொணர்ந்து நிறுத்துகிறேன். மகாராஜாவுக்குச் சிறிதேனும் மன அமைதி உண்டானால், அதனினும் எவர்க்கும் மகிழ்ச்சி தருவது மற்றொன்றில்லை. இதோ அடியனே சென்று அவனை அழைத்து வருகிறேன். பாருங்கள் என் பொய்ம்மை மெய்ம்மைகளை.

[இவ்வாறு சொல்லிக்கொண்டே தன் மேல் அங்கியை அவிழ்த்தெறிந்து, ஏழைப் பிச்சைக்காரவீரனதுஉடையுடன் நின்று, கட்டாரிக் காயத்தால் ரத்தம் தோய்ந்த, துணி சுற்றிய இடதுகையைக் காட்டுகிறான். யாவரும் திகைத்துத் திடுக்கிடுகின்றனர்]

* பெரியபுராணம்.

உக்ர:—(கண்களில் நீர் ததும்ப) ஆ! நீதிபாலரே! இந்த மட்டாவது உம்மை உயிருடன் காண எங்களுக்குக் கொடுத்து வைத்ததே! உம்மை நம் கவசமாகவே கருதிய எமதெண்ணம் பொய்போக வில்லை பாரும். எஜமான ஸேவையில் ஆயிரம் அநுமனும் உமக்கு நிகரல்லர். உம்மை எவ்வாறு வாழ்த்துவது!

*"பாழிய பணைத்தோள் வீர! துணையிலேன் பரிவுதீர்த்த
வாழியர் வள்ளலே! யான் மறுவிலா மனத்தேன் என்னில்,
ஊழியோர் பகலா ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும் இன்றென இருத்தி ஐய!"

என்று சீதா தேவியார் அநுமனை ஆசீர்வதித்ததுபோல் ஆசிர்வதித்துத் திருப்தியுறுகிறோம். நம்மிடம் நீர் வேலைக்கமர்ந்தது முதல், நீர் துன்பந்தவிர இன்பமெய்தியதாகத் தெரியவே இல்லை. [அழுகிறான்]

நீதி:—மகாராஜா! என்ன பிரமாதமிது! தங்களைப்போன்ற தயாபாருக்குத் தக்ககாலத்தில் உதவ எனக்குக் கொடுத்துவைத்திருப்பதாலேயே, நான் மகத்தான பாக்கியசாலி என்று உள்ளபடியே மகிழ்கிறேன். என்னைப்பற்றிய கவலையே இனி வேண்டா. நல்லவேளையாய் என் கையிற் பாய்ந்த பட்டயம், விஷம் தோய்ந்ததன்று.

உக்ர:—ஆ! உம் தைரியம்தான் என்ன! இருக்கட்டும். இவ்வளவும் நடக்குமென்று நீர் எவ்வாறு அறிந்தீர்? இனியேனும் உற்றதை உரைக்க உமக்கு மனம் வரவில்லையா?

நீதி:—மகாராஜா! தாய்க்கொளித்த சூலும் வாய்க்கொளித்த உணவும் உண்டா? நான் இப்போது சொல்லப்போவது ஓர் அதிரகஸ்யமான விஷயம். இதை இங்கு இப்போது இருப்போரைத் தவிர வேறு எவரும் எக்காரணத்தையிட்டும் அறிய வொண்ணாது: சோணாட்டில் எனக்குப் பழைய நண்பர் ஒருவர் உண்டு. அவருடைய ஏகபுத்திரன் இரண்டொரு வாரங்களுக்குமுன் என்னிடம் வந்தான். அவனைக் கண்டதும், என் பழைய நண்பரையே கண்டதுபோலப் பரமானந்தத்தில் மூழ்கினேன்.

உக்ர:—சரி. விஷயத்துக்கு வாரும் விரைவில்.

* கம்பராமாயணம்.

நீதி:—இவ்விடத்திய உப்புப்பெறும் பாக்கியம் கிடைத்ததற்கு முன்பாக, நானும் இவ்வாலிபனின் தந்தையும் சோணாட்டிற் சேனையிற் சேர்ந்து சிறந்த ஜயசீலர்களாக விளங்கினோம். ஆ! ஆ!! அவர் திறத்தை என்னென்பேன்! அவர் ஜயிக்காத யுத்தமுமில்லை. பிடிக்காத கோட்டையுமில்லை. அவரிடத்திருந்த விசேஷ குணம் யாதெனில், அவரது முழுவலிமையும், துன்புறுவோர்க்குத் துணைநின்று உதவி, நீதி வரம்பினுட்பட்டு நின்றதேயாம்.

உக்ர:—(பொறுமையற்று) நீதிபாலரே! உம்முடைய தோழர், வேறு எவ்வாறு இருத்தல் இயலும்? இருக்கட்டும், தந்தையைப் புகழத் தொடங்கிய மும்மரத்தில் தனயனை மறந்துவிட்டீரே.

நீதி:—மன்னிக்கவேண்டும், மகாராஜா! அவனை நான் மறக்கவே இல்லை. "மகனறிவு தந்தையறிவு" என்பர். உள்ளபடியே அம் மகன் பாற்கடலிற் றோன்றிய பனிமதி. பாஞ்சஜன்யத்துதித்த பருமணி. என்ன விநயம்! என்ன அடக்கம்! புருஷசிம்மம் என்றால் அவனே.

உக்ர:—சரி. பெருவீரன்; அதிதீரன். அப்புறம்?

நீதி:—அவன் என் இருப்பிடத்தையும் அவன் தந்தைக்கும் எனக்கும் இருந்த நட்பாற்றலையும் எவ்வாறோ விசாரித்துணர்ந்து ஓர் உத்யோகம்நாடி என்னிடம் வந்துள்ளான். மகாராஜாவிடம் வேலைக்கமர்வதில் அவனுக்கு அதிக ஆவல். அவனுக்குச் செய்யும் எதையும் இவ்வடிமைக்குச் செய்த உதவியென்றேகொண்டு மகிழ்வேன்.

உக்ர:—நீதிபாலரே! உமது வேண்டுகோள் நமக்கு வியப்பையும் நகைப்பையும் விளைவிக்கிறது. நீர் என்ன சாமான்யரா? நீரே பார்த்துச்சொல்லும்போது, வேலை வேண்டுவோன் யாவனுயிருப்பினும் நாம் மறுத்துரைப்போமோ? பயனிலாப் பதடிகளுக்குப் பரிந்து பேசுபவர் அல்லரே நீர். அவன் தகுதிக்கேற்ப நீர் எவ் வேலை எவ்வளவு சம்பளத்தில் தரினும் எமக்குப் பூரண சம்மதமேயாம். எல்லாவற்றிற்கும் நாம் அவனை நேரிற்காணுமாறு வரச்சொல்லும் நாளை—"அவனுக்கு விசேஷ அறிவு சாமர்த்தியங்களுண்டா? அவன் முகத்திற் குறுகுறுப்பு களை முதலியன இருக்கின்றனவா" என்று கவனித்தீரா? பார்வைக்கு லக்ஷணமானவனா அவன்?

நீதி:—திறமையிலும் உழைப்பிலும் குணத்திலும் தந்தையிலும் சதமடங்கு தநயன். ஆந்தை ஒன்றே ஆதவன் பெருமையை அறியாது. அவனைப் பார்த்தவுடனே அகம்பூரியாத ஆடவரும் பெண்டிரும், அகக்குருடரும் முகக்குருடருமே ஆவர். மகாராஜா அவனுடன் அரைநாடி அவனுடன் சம்பாஷித்தால் அவனுடைய சௌரியம், நற்குணம், அழகு, கல்வி, இன்சொல், இளமை முதலியன இனிது விளங்கிவிடும்.

உக்ர:—இருக்கட்டும் நீதிபாலரே! ஏதாவது விஷயத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்து விட்டால், முக்கிய விஷயத்தை மறந்தே விடுகிறீர். நம்முடன் ஆலயத்திற்குப் புறப்பட ஆயத்தமாக இருந்த நீர், புறப்படாமைக்குக் காரணமும், நிகழ்ந்த சதியாலோசனைச் செய்தி அறிந்து அதைத் தடுக்க முயன்ற விவரமும், பிறவும் சொல்ல வந்தவர், அவற்றை விட்டுவிட்டு, ஏதேதோ சொல்லத் தொடங்கிவிட்டீரே. உமது பாலிய நண்பரின் மகனுக்கு வேலை கிடைப்பதில் உமக்கு மிக்க சிரத்தை இருப்பது தவறாகாது. என்றாலும், நம்மைப் பற்றிய விஷயங்களை நாம் முதலில் அறிந்து கொள்ளவேண்டியது அதனினும் அவசியமென உமக்குப் படவில்லையா?

நீதி.—மகாராஜாவால் எது அவசியமென்றும் முக்கியமென்றும் உத்தரவாயிற்றோ, அது சம்பந்தமாகவே இப்பொழுது வேலை வேண்டி வந்திருக்கும் இளவீரனைப்பற்றி, நான் பிரஸ்தாபித்துத் தீர வேண்டியிருக்கிறது. அவன் என்னிடம்வந்து வேலைதருமாறு வேண்டியபோது, நான், "தம்பி! சோம்பேறிக்கு இந்த ஸம்ஸ்தானத்தில் வேலையே இல்லை. இந்நகரில் நடக்கும் அக்கிரமங்கள் இவை. எவ்விதமாவது துஷ்டர்களையோ, அவர்களுடைய வாசஸ்தலத்தையோ, பொல்லாச் சூழ்ச்சிகளையோ, கண்டோ கேட்டறிந்தோ, உன் சாமர்த்தியத்தை வெளிப்படுத்தினால்தான் உனது விருப்பு நிறைவேறும். இல்லையேல் இல்லை" என்றேன். 'நல்லது' என்று ஒப்புக்கொண்டு சென்ற அவ்விளைஞன், பல்வேறு விதமாய் மாறுவேடம்தரித்துச் சில படுபாவிகள் செய்த சூழ்ச்சிகளை உற்றுணர்ந்து, அவற்றை எனக்கு அப்போதைக்கப்போது அறிவித்து வந்தான். அவன் சொல்லை நான் எடுத்தவுடன் நம்பவில்லை. ஆயினும் அவன் சொல்லியது

ஒருவேளை பலித்தால் கழிவிரக்கங்கொள்ளநேருமே என்றெண்ணி எச்சரிக்கையுடன் இருந்து வரலானேன். அவன் சொன்ன யாவும் இம்மியும்போய் போகாமல் நிகழ்ந்துவிட்டன. கிழவி உருக்கொண்டு வந்த கொலைகாரப் படுபாவி, நமது இளவீரனாலேயே பிடிபட்டுத் தேகமெலாம் கொறுக்கொண்டு இப்பொழுது கைதியாகி இருக்கிறான்.

யாவரும்.—அப்படியா! அப்படியா!!

உக்ர:—நீதிபாலரே! பொழுது விடிந்ததும் விடியாததும் அவ் வீரனையும் கொலைஞனையும், நம் முன் கொணர்ந்து நிறுத்தும்.

மங்கை:—இப்பொழுதே பொழுதுவிடிந்துவிட்டாலென்ன? அவ் வீரனைப்பார்க்க எனக்குள்ள ஆத்திரமும் ஆவலும் இவ்வளவவ் வளவில்லையே.

தி:—அதற்கென்ன? மகாராஜாமட்டும் உத்தரவு செய்தால் இக்ஷ ணமே அவன் இங்கிருப்பான். ஆயினும்அவன் மகாராஜாவின் பிற காரியங்களை முன்னிட்டேஎங்கோ சென்றிருக்கிறான், 10 தினங்களுக்குள் இங்கிருப்பன, விவரம்அவன் வந்ததும்தெரியும். கொலைஞனைப்பற்றிய சிந்தனையே எவர்க்கும் இனிவேண்டா. அவன் எங்கும் ஓடித்தப்ப முடியாது. அவனை இப்பொழுதே இழுத்துவரலாம். ஆயினும் இச்சுபதினத்தில் யாவரும் குதூ குலத்துடன் இருக்கும் இச்சமயத்தில், அவன்முகத்தில் விழித்த லும் அவன் செய்கையை நினைத்தலும் மகாபாபம். சாவகாசமாய் அவனை ஒரு நாள் எல்லோர் முன்னிலையி லும் நிறுத்திப் பூரா விசாரணையும் செய்து அவனுக்கும் அவன் கூட்டாளிகளுக்கும், அவனை ஏவியோர்க்கும், அவரவர்க்குரிய பயங்காதண்டனை விதிப் போம் இப்பொழுது அகாலமாயிற்று. உத்தரவானால்—

உக்ர:—ஆம் பிறகு சந்திப்போம். [யாவரும் போகிறார்கள்.]

மூதற்காட்சி முற்றிற்று.

திருக்குடந்தை: ஆயக்கண்ணனார்.

ஹிதாய துல் இஸ்லாம்.

வாரம் 1000 பிரதிகள் வெளியாகின்றன.

இப்பத்திரிகை மார்க்க விஷயங்களையும், வியாபார விஷயங்களையும் இராஜாங்கச் சட்டங்களையும், ஒற்றுமையும் ஜாதி ஒற்றுமையையும் விவரித்து, ஜாதிமத வித்தியாசமில்லாமல் எடுத்துப்பேசுகிறபடியால் ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவையானது. ஒவ்வொரு தனவந்தர்களுடைய வீட்டிலும்போய் உலாவுகிறபடியால் வியாபாரிகளுக்கு அவசியமானது.

வருஷச் சந்தா ரூ. —0—0. மலாய்நாடுகள் ரூ. 7—0—0

விலாசம்:—மானேஜர், 'ஹிதாயதுல் இஸ்லாம்'

571—3-ம் மராதாண, கொழும்பு (சிலோன்)